இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 30-07-2023

# மணிப்பூர் முதல்வருக்கு மனச்சாட்சி இருக்கிறதா?

மணிப்பூர் முதலமைச்சர் பிரேன் சிங் பேட்டியை ஒரு தமிழ் நாளிதழ் தலைப்புச் செய்தியாக வெளியிட்டு இருக்கிறது. ஒருவேளை அது, 'மணிப்பூர் பதிப்போ' என்று சந்தேகப்பட வைத்தது. பிரேன் சிங், புகழ்பாடும் இரண்டு பக்கச் செய்தியின் உள்நோக்கம் என்ன என்பதை நாம் ஆராயத் தேவையில்லை. அவர் சொன்னதை மட்டும் ஆராய்வோம்.

நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டு, பல்லாயிரக்கணக்கில் இடம் பெயர்ந்து, பல்லாயிரக்கணக்கில் முகாமில் தங்கி இருக்கும் கொடூரம் நடந்த - நடந்து கொண்டிருக்கும் மாநிலம் மணிப்பூர். அந்த மாநிலத்தின் முதலமைச்சராக இருப்பவர் பா.ஜ.க.வைச் சேர்ந்த பிரேன் சிங். குக்கி இனப் பெண்களை ஆடை களைந்து ஒரு கும்பல் இழுத்து வரும் காட்சி சமூக வலைதளங்களில் பரவிய பிறகு, 'இது போல நிறைய நடந்துள்ளதே' என்று சொன்னவர்தான் இந்த பிரேன் சிங்.

மே 4 ஆம் தேதி இந்தக் கொடூரச் சம்பவம் நடந்தது என்று சொல்கிறார் முதலமைச்சர். 'இந்த வீடியோ சமூக வலைதளங்களில் பரவிய பிறகுதான் இந்தச் சம்பவத்தின் கொடூரம் வெளிச்சத்துக்கு வந்தது. வீடியோ வந்த பிறகுதான் 6 பேரைக் கைது செய்தோம்' என்கிறார்.

மே மாதம் 4 ஆம் தேதி நடந்த கொடூரத்துக்குக் காரணமானவர்களை சூலை மாதம் 18 ஆம் தேதிக்கு மேல்தான் கைது செய்கிறார் முதலமைச்சர். இதுதான் அவர் ஆட்சி நடத்தும் லட்சணம். இவரது பேட்டி தான் இரண்டு பக்கத்துக்கு வெளியாகி இருக்கிறது. 'வீடியோவில் உள்ள பெண்கள் அனுபவித்த துயரங்களைக் கற்பனை செய்வதுகூட கடினம்' என்கிறார் பிரேன் சிங்.

உண்மையில் அவர் எப்படி நடந்துகொண்டார்? மணிப்பூரில் பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்திக்க டெல்லி மகளிர் ஆணையத் தலைவி ஸ்வாதி மாலிவால் போகப் போவதாகச் சொன்னதும் அவரைத் தடுத்தவர் இந்த பிரேன் சிங். தடையை மீறி கடந்த 23 ஆம் தேதி மணிப்பூர் தலைநகர் இம்பால் சென்றார் ஸ்வாதி. பாதிக்கப்பட்ட பெண், இவரைக் கட்டி அணைத்துக் கதறும் காட்சிகள் அவரது ட்விட்டர் பக்கத்தில் இருக்கின்றன.

"நிர்வாணமாக பெண்களை அழைத்து வரும் வீடியோ என்னை உலுக்கியது. வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட இரண்டு பெண்களின் குடும்பங்களை நான் சந்தித்தேன். இதுவரை யாரும் அவர்களைச் சந்திக்க வரவில்லை. அவர்களை முதலில் அணுகியது நான் மட்டும்தான். மணிப்பூரில் நிர்வாணமாக அணிவகுத்துச் செல்லப்பட்ட இரண்டு பெண்களுக்கும் அரசிடமிருந்து எந்த ஆதரவும் கிடைக்கவில்லை; இழப்பீடும் வழங்கப்பட வில்லை. அவர்கள் இருவரும் இன்னும் அதிர்ச்சியிலேயே உள்ளனர்.

**மணிப்பூரில் நடக்கும் வன்முறை மிகவும் கவலையளிக்கிறது. நான் செல்லும் இடமெல்லாம் மனதை உலுக்கும் சம்பவங்கள்தான் காதில் விழுகின்றன. மக்கள் பலரும் வீடுகளையும் உறவினர்களையும் இழந்துள்ளனர், அவர்களைப் பாதுகாப்பதில் அரசாங்கம் முற்றிலும் தோல்வியடைந்துள்ளது. வீடியோவில் வந்த பாதித்தவர்களைத் தவிர மற்றவர்களையும் சந்தித்தேன். எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் என்னால் இங்கு வரமுடிகிறபோது, முதல்வரோ, மற்றவர்களோ ஏன் இங்கு இதுவரை வரவில்லை. நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டிருக்கும் பெண்களும் குழந்தைகளும் ஓர் இறுக்கமான சூழ்நிலையிலேயே வாழ்கிறார்கள்" என்று ஸ்வாதி சொல்லி இருக்கிறார். இந்த மணிப்பூர் மாநிலத்தின் முதலமைச்சர்தான் பிரேன் சிங்.**

"இன்றுவரை முதலமைச்சர் பிரேன் சிங்கோ அல்லது எந்த கேபினட் அமைச்சரோ அல்லது மூத்த மாநில அரசாங்க அதிகாரியோ அவர்களைச் சந்திக்கவில்லை" என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் பேட்டியில் கண்ணீர் வடிக்கிறார் முதலமைச்சர்.

மொத்தப் பிரச்சினையையும் மடைமாற்றம் செய்கிறார் முதலமைச்சர். மைத்தி இனத்தவரை, பழங்குடி இனத்தில் சேர்ப்பதால் , தங்களது வாய்ப்புகள் பறிபோகும் என்று நினைக்கும் குக்கி இனத்தவரின் போராட்டம் அது. குக்கி இனத்தவர், மதச் சிறுபான்மையினர் என்பதால் அவர்களைக் காவுவாங்கத் துடிக்கும் பா.ஜ.க.வின் மதவாத அரசியல்தான் மணிப்பூர் கலவரத்துக்குக் காரணம். ஆனால் இதனை மறைத்து, பொய்களைச் சொல்கிறார் முதலமைச்சர் பிரேன் சிங்.

போதைப் பொருள்களுக்கு எதிராக தான் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், குக்கி இனத்தவர் அதிகம் வசிக்கும் பகுதியில் போதைப் பொருள் அதிகம் விளைவிக்கிறார்கள் என்றும், இந்த நடவடிக்கைக்கு எதிராக குக்கிக்கள் வன்முறை செய்கிறார்கள் என்றும் சொல்கிறார் முதலமைச்சர். மொத்த இனத்தையும் போதைக்குச் சார்பானவர்களாகக் காட்ட முயற்சிக்கிறார். போதைக்கு எதிரான நடவடிக்கை என்பது மணிப்பூரில் இப்போது தொடங்கவில்லை. 2017 ஆம் ஆண்டு தான் ஆட்சிக்கு வந்ததுமுதல் நடப்பதாகவும் இதே பிரேன் சிங் சொல்கிறார். போதை நடவடிக்கைக்கு எதிரான போராட்டம் ஆறு ஆண்டுகளுக்குப் பிறகுதான் ஆரம்பிக்க வேண்டுமா? போதையை ஒழித்து விட்டதாகவும் சொல்கிறார் இவர். போதை ஒழிந்த பிறகு போராடலாம் என்று குக்கி இன மக்கள் காத்திருந்தார்களா?

மியான்மரில் இருந்து சட்டவிரோதமாக வந்து இங்கு குடியேறியவர்களை தான் தடுப்பதாகவும் அதனால் போராடுகிறார்கள் என்றும் சொல்கிறார். இந்த மாதிரியான குடியேற்றமும் காலம் காலமாக நடப்பதுதான். இன்று பெரிது படுத்தப்படும் அளவுக்கும் இதில் பெரிதாக நுழைவுகள் இல்லை.

அதாவது, ஏதாவது காரணம் சொல்லித் தப்பிக்கப் பார்க்கிறார் முதலமைச்சர் பிரேன்சிங். ஏன் தேவாலயங்கள் இடிக்கப்படுகின்றன என்றால், 'குக்கி இன தேவாலயம்தான் இடிக்கப்பட்டது. நாகாலாந்து இன மக்களின் தேவாலயம் இடிக்கப்படவில்லையே?' என்று கேட்கிறார் முதலமைச்சர். ஏன் அதை விட்டுவைத்துள்ளீர்கள் என்பதைப் போல இருக்கிறது.

**அரசியல் சட்டம் பிரிவு 371(c) இன்படி மணிப்பூரின் பழங்குடி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதில் பாதகம் ஏற்படுவதாகவும் அதனால் தங்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என்றும் குக்கி அமைப்பினர் போராடி வந்தார்கள். ஏராளமான குழுக்கள் ஆயுதம் தாங்கிப் போராடினார்கள். இவர்களை அமைதிப்படுத்த 2008 ஆகஸ்ட் 22ஆம் தேதி Suspension of Operations (SoO) என்ற உடன்படிக்கை எட்டப்பட்டது. ஆயுதக் குழுக்கள் தங்களது போராட்டங்களை நிறுத்தின. இந்த உடன்படிக்கையை மைத்தி இனத்தவர் எதிர்த்தார்கள். கடந்த மார்ச் 10 அன்று அமைச்சரவையைக் கூட்டி SoO உடன்படிக்கையை திரும்பப் பெறுவதாக பிரேன்சிங் அறிவித்தார். இவர் மைத்தி இனத்தைச் சேர்ந்தவர். இதுதான் அடிப்படையான மோதலுக்குக் காரணம். இதனை மறைத்து ஏதேதோ பேட்டி தந்து கொண்டிருக்கிறார் முதலமைச்சர் பிரேன்சிங்.**

குக்கி இன மக்கள் தனி மாநிலம் கேட்கிறார்கள். தங்களுக்கு தனி கவுன்சில் கேட்கிறார்கள். இது பற்றி எல்லாம் அந்தப் பத்திரிக்கையும் கேட்கவில்லை. அவரும் பதில் சொல்லவில்லை!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.7.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில், "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023 போட்டியின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சிலையை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, த.வேலு, ஜோசப் சாமுவேல், எம்.கே.மோகன், ஆர்.டி.சேகர், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, ஜே.ஜே.எபினேசர், துணை மேயர் மு.மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் குமார் திர்கி, பொருளாளர் சேகர் ஜெ. மனோகரன், இந்திய ஹாக்கி அணி தேர்வாளர் முகமது ரியாஸ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 44வது சர்வதேச செஸ் போட்டியை சிறப்பாக நடத்திய

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறந்த மனிதருக்கான விருது!

## ஆசிய செஸ் கூட்டமைப்பின் நிர்வாகிகள் - முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வழங்கினர்!

சென்னை, ஜூலை 30-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு அபுதாபியில் ஆசிய செஸ் கூட்டமைப்பின் சார்பில் வழங்கப்பட்ட 2023-ஆம் ஆண்டிற்கான சிறந்த மனிதருக்கான விருதினை செஸ் கூட்டமைப்பின் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (28.07.2023) முகாம் அலுவலகத்தில், ஆசிய செஸ் கூட்டமைப்பின் துணைத் தலைவர் பரத் சிங் சௌகான் தலைமையில் செஸ் கூட்டமைப்பினர் நேரில் சந்தித்து, 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை வெற்றிகரமாக நடத்திய முதலமைச்சர் அவர்களுக்கு ஆசிய செஸ் கூட்டமைப்பின் சார்பில் வழங்கப்பட்ட 2023-ஆம் ஆண்டிற்கான சிறந்த மனிதருக்கான விருதினை (Man of the Year Award) வழங்கினார்கள்.

44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட், இந்திய வரலாற்றில் முதன் முறையாக தமிழ்நாட்டில், பல்லவர் காலச் சிற்பக்கலையினை பறைசாற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான மாமல்லபுரத்தில் 28.7.2022 முதல் 10.8.2022 வரை மிகச் சிறப்புடன் நடைபெற்றது. இந்த போட்டியில் சர்வதேச அளவில் 185க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த 2000க்கும் அதிகமான சதுரங்க விளையாட்டு வீரர் / வீராங்கனைகள் பங்கேற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 44வது செஸ் ஒலிம்பியாட் நடத்துவதற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 114 கோடி ரூபாய் நிதி நிர்வாக ஒதுக்கீடு செய்து, போட்டி நடத்த அனுமதி கிடைத்த 4 மாத காலத்திற்குள் 44 வது செஸ் போட்டிகளையும், அதன் தொடக்க மற்றும் நிறைவு விழாவினை ஒலிம்பிக் போட்டிகளுக்கு இணையாக உலகமே வியக்கும் வண்ணம் மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினார்.

இந்த போட்டியையொட்டி தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் செஸ் ஒலிம்பியாட் தீபம் கொண்டு செல்லப்பட்டு பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஏற்கனவே உலக அளவில் பல்வேறு கிராண்ட் மாஸ்டர்களை கொண்டுள்ள தமிழ்நாட்டில், மேலும் பல கிராண்ட் மாஸ்டர்களை உருவாக்கும் வகையில் தமிழ்நாட்டின் அனைத்து பள்ளிகளிலும் செஸ் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டு, மாநில அளவில் சிறந்த விளையாட்டு வீரர்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் செஸ் ஒலிம்பியாட்டில் பங்கேற்ற வீரர்களுடன் விளையாடவும், செஸ் ஒலிம்பியாட் விளையாட்டு போட்டிகளை பார்வையிடவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

இந்தப் போட்டியை சிறப்பாக நடத்திட முதலமைச்சர் அவர்கள் தலைமையில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, வெளிநாடுகளில் இருந்து போட்டிகளில் பங்கேற்க வருகை தந்த சர்வதேச சதுரங்க விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்குவதற்கு உயர்தர நட்சத்திர விடுதிகள், தங்கும் இடத்திலிருந்து போட்டி நடைபெற்ற இடத்திற்கு சென்று வர சிறப்பு போக்குவரத்து வசதிகள், உணவு மற்றும் பாதுகாப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டது.

**முதல்வருக்கு சிறந்த மனிதருக்கான விருது!**

44வது செஸ் ஒலிம்பியாட் போட்டியை சிறப்பாக நடத்தி, இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் சதுரங்கப் போட்டிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட காரணமாக விளங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு அபுதாபியில் ஆசிய செஸ் கூட்டமைப்பின் சார்பில் 1.03.2023 அன்று நடைபெற்ற Asian Chess Excellence Awards விருது வழங்கும் நிகழ்ச்சியில், 2023ஆம் ஆண்டிற்கான சிறந்த மனிதருக்கான விருது (Man of the Year Award) வழங்கப்பட்டது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்ட இந்த விருதினை ஆசிய செஸ் கூட்டமைப்பின் துணைத் தலைவர் பரத் சிங் சௌகான் அவர்கள் அன்றைய தினம் பெற்றுக் கொண்டார்.

44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெற்று இன்றுடன் 28.07.2023 ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி, ஆசிய மற்றும் அகில இந்திய செஸ் கூட்டமைப்பினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர். மேலும், தமிழ்நாடு முழுவதும் பொதுமக்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் சதுரங்க போட்டி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி, மற்ற மாநிலங்களுக்கு முன்னேடியாக 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை நடத்தியதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு ஆசிய செஸ் கூட்டமைப்பின் சார்பில் வழங்கப்பட்ட 2023-ஆம் ஆண்டிற்கான சிறந்த மனிதருக்கான விருதினை (Man of the Year Award) வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, அகில இந்திய செஸ் கூட்டமைப்பின் தலைவர் சஞ்சய் கபூர், துணைத் தலைவர் பவேஷ் பட்டேல், செயலாளர் விபினேஷ் பரத்வாஜ், பொருளாளர் நரேஷ் ஷர்மா ஆகியோர் உடனிருந்தனர்.

### என்.எல்.சி. விவகாரம்:

# அமைதிக்கு குந்தகம் விளைவித்தால் கடும் நடவடிக்கை!

## அமைச்சர் தங்கம் தென்னரசு எச்சரிக்கை!

மதுரை, ஜூலை 30–

வன்முறை போர்வையை போர்த்திக் கொண்டு அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடியவர்கள் யாராக இருந்தாலும் எவராக இருந்தாலும் அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும் என அமைச்சர் தங்கம் தென்னரசு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

என்.எல்.சி. விவகாரம் தொடர்பாக மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு செய்தியாளரிடம் கூறியதாவது:–

என்.எல்.சி. சுரங்க விரிவாக்க பணி இந்த பரவனாற்று மாற்று பாதை மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது.

இதை செய்தால் தான் அந்த சுரங்கத்திற்கு உண்டான மற்ற பணிகள் செய்ய முடியும். சுரங்கப் பணிகளுக்கான அனைத்து பணிகளும் மேற்கொண்டால்தான் மின்சாரம் உற்பத்தி பாதிக்காமல் இருக்கும். மின்சார உற்பத்தி பாதிக்காமல் இருந்தால் தான் நமக்கு உரிய மின்சாரம் வழங்கப்பட கூடிய சூழல் நிலை வரும்.

**இழப்பீட்டுத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது!**

பரவனாற்று மாற்று பாதை அமைக்கும் பொழுது அங்கே ஏற்கனவே பயிர் நடவு செய்திருப்பவர்களுக்கு பயிர் இழப்பீட்டு தொகையாக ஒரு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.30 ஆயிரம் அளவிற்கு என்.எல்.சி. இடம் இருந்து இழப்பீட்டுத் தொகை பெறுவோம் என்று உறுதி அளித்திருந்தோம். இதற்கு முன்பு ஒரு ஏக்கருக்கு ரூ.23 லட்சம் வரை வழங்கப்பட்ட தொகை தற்போது ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

என்.எல்.சி. நிறுவனத்துக்கான இந்த நில எடுப்பு பணிகளில் உள்ளூரில் இருக்கக்கூடிய விவசாயிகள், என்.எல்.சி. அதிகாரிகள், மாவட்ட நிர்வாகம், பல்வேறு அரசியல் கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நிலைகளில் பேச்சுவார்த்தை நடத்தி இழப்பீடு தொகை வழங்கப்பட்டிருக்கிறது.



இந்த சூழ்நிலையில் இன்றைக்கு என்.எல்.சி.யில் சில அரசியல் கட்சிகள் போராட்டம் நடத்துவதாக அறிவித்து போராட்டம் அறவழியில் நடைபெறுவதைத் தாண்டி அந்த போராட்டம் வன்முறை கலவரமாக வெடித்திருப்பது என்பது மிகவும் கண்டனத்திற்குரியது.

இந்த வன்முறை போராட்டம் காரணமாக அங்கு இருக்கக்கூடிய விவசாயிகள் நில உரிமையாளர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையை அமைதியாக அணுகினாலும் சில இடங்களில் வெளி ஊர்களில் இருந்து வெளிநபர்கள் அரசியல் உள்நோக்கம் கொண்டு தூண்டுதலின் பேரில் வந்தவர்களால் வன்முறை ஏற்பட்டு இருக்கிறது. இந்த வன்முறை என்பது மிக மிக கண்டிக்கத்தக்க ஒன்றாகும். இந்த வன்முறையால் 20–க்கும் மேற்பட்டோர் காயமடைந்து இருக்கிறார்கள்.

**பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தால் கடும் நடவடிக்கை!**

ஒரு பிரச்சினையை சுமுகமாகப் பேசினால் தான் தீர்வு காண முடியும். ஏற்கனவே பல்வேறு கட்ட காலங்களில் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு இருக்கிறது.

அதை விடுத்து வன்முறை குறுகிய கால அரசியல் ஆதாயத்திற்காக விவசாயிகளை கேடயமாக வைத்துக்கொண்டு இத்தகைய வன்முறை நடவடிக்கையில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது.

வன்முறை தமிழ்நாட்டின் எந்த மூலையிலும் நடந்தாலும் தமிழக அரசு அனுமதிக்காது.

வன்முறை போர்வையை போர்த்திக் கொண்டு அமைதிக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய யாராக இருந்தாலும் எவராக இருந்தாலும் அரசு கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளும்.

அறவழியில் போராட்டம் நடத்துவதாக கூறியதால் தமிழக அரசு அனுமதி வழங்கியது.

ஜனநாயக ரீதியாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவதாக தெரிவித்ததால், அவர்களது உணர்வுகளை மதிப்பளித்து தமிழக அரசு அனுமதி வழங்கியது. ஆனால் இதை மீறி நிறுவனத்தின் பணிகளை பாதிக்கும் வகையில் வேண்டுமென்றே வன்முறைக்கான களத்தை உருவாக்குவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சட்டம் ஒழுங்கை சிறப்பாக பாதுகாத்து செயல்படுத்த வேண்டியது அரசின் கடமை.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு கூறினார்.